# மெய்வல்லுநர் போட்டிகளில் அதிசிறந்த வீரர்களைத் தெரிவதற்கான பொறிமுறை

ஒரு போட்டியாளர் தனது வயதுப்பிரிவில் அதிசிறந்த வீரராகத் திகழ்வதற்கு பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்திருக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட தனது வயதுப்பிரிவில்,

- மூன்று தனி விளையாட்டுக்களில் பங்குபற்றியிருத்தல் வேண்டும்
  - ஒரு மைதான விளையாட்டு (Field event) + இரண்டு சுவட்டு விளையாட்டுகள் (Track events) அல்லது
  - ஒரு சுவட்டு விளையாட்டு (Track event) + இரண்டு மைதான விளையாட்டுகள் (Field events)
- மூன்று விளையாட்டுக்களிலும் வெற்றியீட்டியிருத்தல் வேண்டும் (முதல் மூன்று இடங்களிற்குள் வருதல்).
- கிடைக்கப்பெற்ற இடங்களின் அடிப்படையில் கூடுதலான புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும்.
  - முதலாம் இடம்: 5 புள்ளிகள்
  - இரண்டாம் இடம்: 3 புள்ளிகள்
  - மூன்றாம் இடம்: 1 புள்ளி
- ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் சமமான அதிகூடிய புள்ளிகளைப் பெறும்பட்சத்தில் சம்பந்தப்பட்ட அனைவரும் அதிசிறந்த வீரர்களாகத் தெரிவுசெய்யப்படுவர்.